**02.07.2026**

STC.No. 98/2025 பாரதி மோகன் த/பெ. கலியமூர்த்தி PW1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்)**

15.05.2025 ம் தேதி நான் ஒரு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றாலும், அதன் பின்பு 13.06.2025 அன்று வேறு ஒரு வழக்கறிஞர் மூலம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் என்னுடைய வழக்கறிஞரிடம் தான் விவரங்களை சொன்னேன். என்னுடைய வழக்கறிஞர் பெயர் என்னவென்றால் அமிர்தராஜன் ஆகும். எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்னால் எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனது வங்கி கணக்கில் இருப்பதை குறிக்கும் என்னுடைய வங்கியின் வரவு, செலவு விவரங்கள் மற்றும் ஆவணங்கள் எதையும் நான் புகாருடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி வெள்ளி தொழில் செய்து வருகிறார் என்ற விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்திய பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி வெள்ளி தொழில் செய்து வருகிறார் என்பதற்கான எந்த ஆவணத்தையும் நான் புகாருடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மீது இந்த நீதிமன்றத்தில் 2024, 2025 ம் ஆண்டு குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தவிர வேறு ஏதேனும் காசோலை வழக்கு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் என்னுடைய குறுக்கு விசாரணையில் எதிரியின் கைபேசி எண் தெரியாது மற்றும் தொலைபேசி மூலம் எதிரியிடம் பேசியது இல்லை என சொல்லியுள்ள என்னுடைய

நிருபண வாக்குமூலம் பத்தி 24ல் நான் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பை பெற்றுக் கொண்டு தற்போது குறுக்கு விசாரணையில் பதில் அறிவிப்பை நான் பெறவில்லை என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 05.05.2025 அன்று தான் வழக்கு காசோலையில் தேதி, தொகை, எனது பெயர் ஆகிய விவரங்களை நிரப்பி வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் 05.05.2025 அன்று வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். ஆனால் அன்றைய தினம் விவரங்கைகை நிரப்பவில்லை. நான் எந்த தேதியில் வழக்கு காசோலையில் உள்ள விவரங்களை நிரப்பினேன் என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகமில்லை. நான் எதிரியிடம் 2022 முதல் பேசவில்லை என சொல்லியுள்ள நிலையில் எதிரி எவ்வாறு 25.01.2025 அன்று என்னை வந்து சந்தித்தார் என்றால் சந்திரசேகர் என்பவர் எனது நண்பர் ஆவார். எதிரி சந்திரசேகருக்கு நண்பர் ஆவார். எதிரி என்னிடம் வெள்ளி தொழில் செய்ய வேண்டும் என கடனாக கேட்டார். மேலும் இதுகுறித்து தொலைபேசியில் பேச வேண்டாம், நேரில் பேசிக் கொள்ளலாம் என்று சொன்னார். எதிரி, சந்திரசேகர் என்பவருடன் தான் என்னை பார்க்க வருவார். எதிரி எந்த வருடத்தில், எத்தனை முறை என்னை சந்திரசேகரன் என்பவருடன் வந்து சந்தித்தார் என்றால் வருடம் குறித்து எனக்கு ஞாபகமில்லை. சுமார் 10 முறை சந்தித்திருப்பார். எதிரி வெள்ளி தொழிலுக்காக கடன் கேட்டார் என்ற விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்திய பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரில் எதிரி குடும்ப அவசர தேவைக்காகவும், பழைய கடன்களை

அடைக்கவும் 25.01.2025 அன்று என்னிடம் ரூ. 9,60,000/– கடனாக பெற்றார் என குறிப்பிட்டுட்டேன் என்றால் சரிதான். சந்திரசேகரன் என்னுடைய நெருங்கிய நண்பர் என குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அவர் மூலமாத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி சந்திரசேகர் என்பவரிடம் 14.10.2020 அன்று ரூ. 3,00,000/– கடனாக பெற்றார் என்றாலும், அதற்காக நிரப்பப்படாத ஒரு கடன்உறுதி சீட்டு மற்றும் ஸ்டேட் பாங்க் காசோலைகள்– 5 ஆகியவற்றை பிணை ஆவணங்களாக கொடுத்தார் என்றாலும், அந்த காசோலைகளின் எண்கள். 562413, 562414, 562415, 562416, 562417 என்றாலும் சந்திரசேகர் 22.04.2022 அன்று காசோலை எண். 562415 ஐ ரூ. 20,00,000/–ற்கு நிரப்பி வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தார் என்றாலும், அந்த காசோலையானது 26.04.2022 அன்று Exceeds arrangements என்ற குறிப்புடன் திருப்பப்பட்டது என்றாலும் அதன் பின்னர் இவ்வழக்கின் எதிரி சந்திரசேகர் என்பவரிடம் உள்ள மற்ற காசோலைகளை அவர் தவறாக பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காக எதிரியின் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, கன்டோன்மென்ட் கிளைக்கு மற்ற காசோலைகளின் எண்களை குறிப்பிட்டு 27.04.2022 அன்று Stop payment குறிப்பை அனுப்பினார் என்றாலும், அதனால் தான் நான் இந்த வழக்கின் வழக்கு காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யும்போது Stop payment குறிப்புடன் வழக்கு காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றாலும், என்னுடைய வழக்கிற்கும், மேற்சொன்ன விவரங்களுக்கம் எந்த சம்மந்தமும் இல்லை. சந்திரசேகரன் காசோலை எண். 562417 ஐ ரூ. 20,00,000/–ற்கு நிரப்பி அந்த காசோலை Stop payment என்ற குறிப்புடன் 07.02.2023 அன்று திருப்பப்பட்டதால் சந்திரசேகரன்

இவ்வழக்கின் எதிரி மீது CC 371/2023 என்ற வழக்கை குற்றவியல் நீதிமன்றம் எண்.1, திருச்சியில் தாக்கல் செய்து தற்சமயம் நிலுவையில் உள்ளது என்றாலும் அதுகுறித்து எனக்கு தெரியாது. சந்திரசேகரன் குற்றவியல் நீதிமன்றம் எண்.1, திருச்சியில் CC 371/2023 என்ற வழக்கில் 06.06.2025 அன்று தன்னுடைய குறுக்கு விசாரணை தொடர்ச்சியில் எதிரியிடமிருந்து பிணை ஆவணங்களாக பெறப்பட்ட கடன் உறுதி சீட்டு மற்றும் காசோலை எண். 562413, 562414, 562415, 562416, 562417 ஆகியவற்றில் 542615 மற்றும் 562417 ஆகிய காசோலைகளை வெவ்வேறு தேதிகளில் ரூ. 20,00,000/- வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன்என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கு காசோலையானது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என்னுடைய நண்பர் சந்திரசேகரன் என்பவரிடம் இருந்தது என்றால் சரியல்ல. சந்திரசேகரனிடமிருந்த வழக்கு காசோலையை சந்திரசேகரன் என்னை ஏவி என் மூலமாக மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கு காசோலையின் விவரங்களை நானே நிரப்பி போலி ஆவணமாக தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை போலி ஆவணம் என நன்கு தெரிந்தே நான் அதை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக இந்த மோசடியான, பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சந்திரசேகரனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்தார் உண்மை தன்மை தெரிய வரும் என்றால் நீதிமன்றம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நான் கட்டுப்படுவேன். நான் சந்திரசேகரனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கிறேனா என்றால் சந்திரசேகரனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க வேண்டிய

அவசியமில்லை. எவ்வித முகாந்திரமும் இல்லாமல் எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள மோசடியான பொய்யான இந்த வழக்கானது செலவு தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட வேண்டிய வழக்கு என்றால் சரியல்ல. நானும், சந்திரசேகரனும் கூட்டு சதி செய்து போலி ஆவணம் தயாரித்து, மோசடி செய்ததால் நானும், சந்திரசேகரனும் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய நபர்கள் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.07.02 18:07:13 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி